**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**இளங்கலை சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு திட்டம்**

**இறுதிப் பரீட்சை – 2022/23**

**LLU3602 – சட்ட வழிமுறையும் சட்ட வரைதலும்**

**காலம் - மூன்று(03) மணித்தியாலங்கள்**

**திகதி: 25.02.2024** **நேரம்:** பி.ப. 01.30 - பி.ப 04.30

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08**

**ஐந்து(05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

**பகுதி I இல் குறைந்தது இரண்டு(02) வினாக்களுக்கும், பகுதி II இல் மூன்று(03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**தெளிவற்ற கையெழுத்துக்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

**பகுதி I – சட்ட வரைதல்**

இந்தப் பகுதியில் இருந்து ஏதாவது **இரண்டு(02)** வினாக்களுக்கு விடையளிக்குக.

01. (a). சட்டவாதங்களை உருவாக்கப் பயன்படும் பொதுப்படையாக மதிப்பீடு செய்தல்(inductive reasoning) மற்றும் உய்த்தறிந்து மதிப்பீடு செய்தல்(deductive reasoning) முறைகளை ஒப்பிடுக.

(10 புள்ளிகள்)

(b). (i) நீர் சட்டபூர்வ விடையில் விமர்சனம் எழுதுதல் மூலம் என்ன விளங்கிக் கொண்டீர்? (02 புள்ளிகள்)

(ii) ஒரு சட்டபூர்வ விடையில் நுணுக்கமான எழுதுதலின் முக்கியத்துவம் மீதான ஒரு சுருக்கமான குறிப்பை எழுதுக. தேவையான இடங்களில் எடுத்துக்காட்டுக்களை வழங்குக.

(08 புள்ளிகள்)

(10+02+08=20 புள்ளிகள்)

02. (a). சட்டமூலங்களை கற்பதில் பயன்படுத்தக் கூடிய பின்வரும் மூன்று நுட்பங்களை பகுப்பாய்வு செய்க.

I. நுட்பமாகப் பரிசோதித்தல் (Scanning)
II. மேலோட்டமாக நோக்குதல் (Skimming)
III. கவனம் செலுத்தி வாசித்தல் (Focused reading)

(10 புள்ளிகள்)

(b) (i) வழக்கு அறிக்கையின் வெவ்வேறு பாகங்களைப் பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(ii) நீர் மேலே பட்டியலிட்டுள்ள ஒவ்வொரு பாகங்களையும் விளக்குக.

(05 புள்ளிகள்)

(10+05+05=20 புள்ளிகள்)

03. (a) வழக்குக் குறிப்புக்களை எழுதுவதற்கான படிப்படியான செயல்முறையை விளக்குக.

(12 புள்ளிகள்)

(b) சட்டபூர்வ மதிப்பீடு செய்தலை எளிதாக்கும் IRAC( விடயங்கள், விதிகள், பிரயோகம் மற்றும் முடிவுரை) முறைமையை சுருக்கமாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

## பகுதி II – சட்ட வழிமுறை

இந்தப் பகுதியில் இருந்து ஏதாவது **மூன்று(03)** வினாக்களுக்கு விடையளிக்குக.

04. நீதிமன்ற முற்தீர்ப்புக் கோட்பாட்டுடன் தொடர்புடைய பின்வரும் கருத்துக்களைக் கண்டறிந்து, அவற்றை தேவையான எடுத்துக்காட்டுக்களை வழங்குவதன் மூலம் ஆராய்க.

a) இறுதித் தீர்ப்பை இயக்கும் ஒரு வழக்கின் முக்கிய நிகழ்வுப் புள்ளி அல்லது காரணங்களின் கோர்வை.
b) ஒரு நீதிபதியால் செய்யப்பட்ட பொதுவான ஒரு பரிந்துரை அல்லது அவதானிப்பு, இது வழக்கைத் தீர்ப்பதற்கு அவசியமாகப் பங்களிக்காது என்பதுடன் மேலும் இது ஏனைய நீதிமன்றங்களின் மீதும் பிணிக்காது, ஆனால் எதிர்கால வழக்குகளில் தூண்டும் அதிகாரமான மேற்கோள் காட்டப்படலாம்.
c) முந்தைய தீர்ப்பானது, தவறாக முடிவு செய்யப்பட்டதுடன், நீதிபதிகள் அதனைப் பின்பற்ற விரும்பவில்லை.
d) கீழ்நிலை நீதிமன்றத்தின் அல்லது சமநிலை நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பினை நிராகரித்தல் மற்றும் செல்லுபடியற்றதாக்குதல். இதன் விளைவாக, முந்தைய தீர்ப்பு வெற்றும் வெறிதாகும் என்பதுடன் புதிய தீர்ப்பு பழைய தீர்ப்புக்கு அதிகாரபூர்வ மாற்றாக ஆகும்.

(4 × 5 = 20 புள்ளிகள்)

05. ‘சட்டத்தில் கடினத்தன்மை இருக்கின்ற போது, நீதி எய்தப்பட முடியாது என்ற அடிப்படையின் மீது ஒப்புரவு அறிமுகப்படுத்தப்பட்டது.’

மேலுள்ள அறிக்கையின் பிண்ணனியில், ஒரு சட்டத் தோற்றுவாயாக ஒப்புரவின் முக்கியத்துவத்தை ஆராய்க. உமது விடையானது நடைமுறை எடுத்துக்காட்டுக்கள் மற்றும் வழக்குச் சட்டத்தினூடாக ஆதாரப்படுத்தப்பட வேண்டும். (20 புள்ளிகள்)

06. லகாசா என்பது மகாரா நாட்டின் மத்திய மலைநாட்டின் காடுகளில் வாழும் ஒரு பழங்குடி சமூகமாகும். மகாரா நாட்டின் பழங்கால மரபுகள் மற்றும் வழக்காறுகளைக் கடைபிடிப்பதன் மூலம் தங்கள் சமூகத்தின் அடையாளத்தை வெளிப்படுத்த லகாசா சமூக மக்கள் ஒவ்வொரு ஆண்டின் மார்ச் மாதத்தில் "லுலு" எனும் பண்டிகையினை கொண்டாடுகிறார்கள். சட்டம் பயிலும் மாணவியான ஹாலா ஒரு ஆய்வினை நடாத்துவதற்காக இப்பண்டிகைகளில் ஒன்றில் கலந்து கொண்டாள், மேலும் லுலு பண்டிகையின் போது லகாசா மக்கள் மான்கள், முயல்கள் மற்றும் காட்டெருமைகள் போன்ற விலங்குகளினை பலியிடல் செய்யும் சடங்கு செய்வதை உணர்ந்தாள். இத்தகைய கொலைகளானது, மகாரா அரசின் காட்டு விலங்குகள் வேட்டையாடுதலைத் தடுக்கும் சட்டத்தை மீறுவதை அவதானித்தாள். அச்சட்டத்தின் பிரிவு 02 ஆனது பின்வருமாறு கூறுகின்றது.

"எந்தவொரு நபரும் ஏதேனும் சரணாலயத்தில் உள்ள ஊர்வன அல்லது ஏதேனும் பறவையின் ஏதேனும் முட்டையை அழிக்கும் அல்லது எந்தவொரு காட்டு விலங்கினையும் வேட்டையாடவோ, சுடவோ, கொல்லவோ அல்லது பிடிக்கவோ கூடாது"

எனவே ஹாலா லுலு பண்டிகையில் கடவுளின் பெயரால் விலங்குகளை பலியிடும் சடங்கினை சவாலுக்குட்படுத்தி வழக்கொன்றைத் தொடர்ந்தாள். லகாசா சமூகத்தின் தலைவர் " இத்தகைய சடங்குகள் தமது மூதாதையர் காலத்திலிருந்தே இருப்பதாகவும், இத்தகைய பலியிடுதல்களின் ஊடாக கடவுளை மகிழ்விப்பதன் விளைவாக தமது சமூகத்தினர் காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்கப்படுவர் என நம்புவதாகவும் மற்றும், கூறப்பட்ட பலியிடுதல் சடங்கு இன்றி இப்பண்டிகை முழுமையாக செயற்படுத்தப்பட முடியாது" எனவும் வாதிட்டார்.

இவ்வழக்குத் தொடர்பான சட்டப் பிரச்சினைகளின் மீது கவனம் செலுத்தி ஒரு அறிக்கையினை வரைய நீர் கேட்கப்படுகிறீர் எனக் கருதுக. உமது அறிக்கையானது, இச்சடங்கானது ஒரு வலிதான வழக்காற்றை நிறுவுகிறதா என்பது தொடர்பாக பிணக்கிற்குரிய திறத்தவருக்கு ஆலோசனை வழங்கக் கருதியிருக்க வேண்டும்.

இயைபான நியதிச்சட்டப் பிரிவுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களை உள்ளடக்கி உமது அறிக்கையினை தயாரிக்குக. மேலும், மகாரா நாட்டின் சட்டமானது இலங்கையின் சட்டத்தை ஒத்தது எனக் கருதுக.

(20 புள்ளிகள்)

07. 'உள்நாட்டுச் சட்டத்தில் சர்வதேச பொருத்தனைகளின் பிணிக்குகும் தன்மையானது, வினாக்குரிய அரசு தன்னை சர்வதேச சட்டத்தில் எவ்வாறு முன்வைத்திருக்கிறது என்பதன் மீதே தங்கியுள்ளது'

சட்டத்தின் ஒரு தோற்றுவாயாக சர்வதேச பொருத்தனைகள் என்பதற்கமைவாக மேற்தரப்பட்ட கூற்றினை ஆராய்க. அவசியமான இடங்களில் இயைபான உதாரணங்களை வழங்குக.

(20 புள்ளிகள்)

08. கீழ்தரப்பட்டவற்றின் மீது சிறுகுறிப்பு வரைக.

a) சட்டத்தின் வகைகள்

b) கண்டியச் சட்டத்தின் அபிவிருத்தியில் சட்ட அறிஞர்களின் பங்களிப்பு

c) நீதிமன்ற முற்தீர்ப்பினை செயற்படுத்துவதற்கான முக்கிய காரணிகள்

d) இலங்கையில் சட்ட உயர்தொழில்

(4×5 =20 புள்ளிகள்)

*-முழுப் பதிப்புரிமை பெற்றது-*